STC. 108 /2022
PW2
நாள். 02.09.2024
பெயர்: சாலை தனராஜ்
த/பெ : மெய்வழி ராதாகிருஷ்ணன் செட்டியார்
ஊர். அன்னவாசல்

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 02th day of September 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் தான் என்னை சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிக்கையில் புகார்தாரர் எனக்கு என்ன உறவு முறை ஆவார் என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். எதிரியின் குடும்ப செலவு மற்றும் முன் கடன் என்ன என்ற விவரங்களை எனது பிரமாணப் பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையின் எண் என்னவென்றால் 684670 ஆகும். காசோலை தேதி என்னவென்றால் 10.02.2022 ஆகும். எதிரியிடம் கொடுத்ததாக சொல்லப்படும் பணம் ரூ. 4,50,000 புகார்தாரருக்கு எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் எனது பிரமாணப் பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் புகார்தாரருக்கு கொடுத்தேன் என சொல்லியுள்ளேன். அவ்வாறு கொடுத்ததற்கான ஆவணங்கள் ஏதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன ரூ.4,50,000 த்தை நான் எதற்காக புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் அவர் படிப்பு செலவிற்காக மாதம் மாதம் நான் அனுப்பிய தொகையில் இருந்து அவர் சேமித்து வைத்துள்ளார். அவ்வாறு நான் பணம் அனுப்பியது குறித்தும், புகார்தாரர் பணம் சேமித்து வைத்தது குறித்தும், காட்டக்கூடிய ஆவணங்களையும் புகார்தாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் தாக்கல் செய்துள்ளார்.

3. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. புகார்தாரர் எதிரிக்கு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றாலும், நானும் ,எதிரியும், தொழில் ரீதியாக நண்பர் என்ற முறையில் கொடுத்த தொகையையும் பெற்றுக் கொண்டு அதிக வட்டி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எனது மகள் வழக்கறிஞர் என்பதற்காக அவர் பெயரில் காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும்,

புகார்தாரருக்கும் எவ்வித பணம் கொடுக்கல் வாங்கல் நேரடியாக கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரி என்னிடம் வாங்கிய கடன் தொகைக்கு எனது வங்கி கணக்கிலும் எனது மகன் மற்றும் மகள் ஆகியோர்களின் வங்கி கணக்குகளில் செலுத்தி விட்டார் என்றால் சரியல்ல. அதற்கு உண்டான வங்கி ஆவணங்களை எதிரி கைவசம் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய அறுகதையுடையது என்றால் சரியல்ல.